# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2013

**தமிழ் மொழியும் இலக்கியமும் I,II** | மூன்று மணித்தியாலம்

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1 - 40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

---

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் தொடர்பான வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "கம்பரே 'திமிதம் இட்டுத் திரியும் திரைகடல் துமி' என்று சொன்னீர் அல்லவா?" இங்கு **திமிதம்** என்பதன் பொருள்
   (1) ஓசை (2) பேரொலி (3) பேரலை (4) அமுதம்

2. மார்த்தாண்டன் மீது பெண் புலி போல் பாய்ந்து மருமத்தில் குத்தினாள். **மருமம்** என்பதன் பொருள்
   (1) தலை (2) வயிறு (3) மார்பு (4) முதுகு

3. அவரின் கண்களில் பயங்கரமான குரோதம் குடிகொண்டிருக்கின்றது. இங்கு **குரோதம்** என்பதன் பொருள்
   (1) வெறுப்பு (2) சினம் (3) ஆணவம் (4) இறுமாப்பு

4. 'வருந்தி வந்தவருக்கு ஈதலும் வைகலும்'....... இங்கு **ஈதல்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   (1) கொடுத்தல் (2) ஏற்றல் (3) தேடல் (4) வாங்குதல்

5. சேரனின் திண்மையான தோள்களைக் கண்டு பகைவர்கள் அஞ்சினர். இங்கு **திண்மை** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   (1) நுண்மை (2) வலிமை (3) மென்மை (4) நொய்ம்மை

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6 செய்யுள் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
   (1) எதுகை (2) மோனை (3) சிலேடை (4) மடக்கு

7. கற்றாளையின் உள்ளீடு சோறு போல தோடையின் உள்ளீடு
   (1) சுளை (2) சதை (3) விதை (4) முத்து

8. இல்லது இனியது நல்லதை அழகுபடக் கூறுதல்
   (1) முன்னுரை (2) அணிந்துரை (3) பதிப்புரை (4) புனைந்துரை

9. புரம், புறம் என்பன முறையே தரும் பொருள்
   (1) ஊர், நகரம் (2) இடம், பக்கம்
   (3) ஊர், இடம் (4) பக்கம், நகரம்

[பக். 2 ஐப் பார்க்க

10. பொருள் பண்டங்களை மட்டாகச் செலவு செய்வது
(1) சிக்கனம் (2) உலோபம் (3) உதாரம் (4) செலவினம்

11. 'இப்படியிருக்கலாம்' எனக் கொள்ளப்படுவது
(1) எடுகோள் (2) கருதுகோள் (3) திசைகோள் (4) உபகோள்

12. பின்வருவனவற்றுள் ஓசைநயத்துடன் அமைந்துள்ள இணை மொழி
(1) ஒளிப்பு மறைப்பு (2) கல்வி கேள்வி
(3) ஏறக்குறைய (4) பச்சைப்பசேல்

13. அலுமாரி, யன்னல், சாவி என்பன எந்த மொழிச் சொற்கள்?
(1) ஒல்லாந்த மொழி (2) ஆங்கில மொழி
(3) போர்த்துக்கேய மொழி (4) பாரசீக மொழி

14. கந்தம், நாற்றம், விரை என்பன குறிக்கும் பொருள்
(1) களங்கம் (2) வாசனை (3) மாலை (4) மலை

15. 'மல்ரி மீடியா மெசேஜ் சேவிஸ்' (Multi Media Message Service) என்பதன் கலைச்சொல்
(1) பல்லூடகச் செய்திச் சேவை (2) குறுஞ் செய்தி சேவை
(3) வலைத் தளச் சேவை (4) வெகுசனப் பண்பாட்டுச் சேவை

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்
(1) தலையைத் தடவுதல் (2) முகம் கொள்ளுதல் (3) முகம் புகுதல் (4) தலையளி செய்தல்

17. 'ஆட்கொள்ளுதல்' என்னும் மரபுத்தொடர் தரும் பொருள்
(1) விரும்புதல் (2) அடிமையாகக் கொள்ளல்
(3) உடன்படல் (4) அடக்கமின்றிப் பேசுதல்

18. 'தடிகொண்டு அடித்தா சுவர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும்' எனும் முதுமொழிக்கு ஒத்த பழமொழி
(1) கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
(2) சாண் பாம்பானாலும் முழம் தடி கொண்டடி
(3) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
(4) துறவிக்கு வேந்தன் துரும்பு

19. பயனற்ற முயற்சியில் ஈடுபடல் என்ற பொருள் **தராத** உவமைத் தொடர்
(1) ஆற்றில் கரைத்த புளி போல (2) புறக்குடத்தில் வார்த்த நீர் போல
(3) அக்கினியிற்பட்ட மெழுகு போல (4) விழலுக்கு இறைத்த நீர் போல

20. மண் சரிவின்போது புத்திசாலித்தனமாகச் செயற்பட்டதால் கண்ணன் உயிர் தப்பினான். புத்திசாலித்தனம் என்ற கருத்தினைத் தரும் அருஞ் சொற்றொடர்
(1) சாதுரியமாகவும் மாதுரியமாகவும் (2) கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும்
(3) உயிருக்குயிராய் (4) குற்றங்களைந்து குணங்கொண்டு

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் தல், அல் ஆகிய இரு விகுதிகளையும் ஏற்கும் வினையடி
(1) பார் (2) பாய் (3) நட (4) ஓடு

[பக். 3 ஐப் பார்க்க

22. இடைச்சொல்லும் வினைச்சொல்லும் சேர்ந்து உருவாகிய கூட்டு வினைக்கு உதாரணம்
(1) தந்தியடி (2) பின்பற்று (3) தட்டிக்கேள் (4) சீரழி

23. அந்த மாணவன் இன்று பாடசாலைக்கு வரவில்லை. இங்கு “அந்த” என்ற இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(1) சுட்டுப்பொருள் (2) எதிர்மறைப் பொருள் (3) முற்றுப் பொருள் (4) வினாப் பொருள்

24. வாள் + படை என்பதைப் புணர்த்தினால் வருவது
(1) வாள்படை (2) வான்படை (3) வாட்படை (4) வாற்படை

25. 'நாராய் ! நாராய் செங்கால் நாராய்......' இங்கு நாராய் என்ற சொல் ஏற்றுள்ள வேற்றுமை
(1) கருவி வேற்றுமை (2) இட வேற்றுமை
(3) நீங்கல் வேற்றுமை (4) விளி வேற்றுமை

26. பகுபத உறுப்புகளில் காலம் காட்டும் உறுப்பு அல்லாதது.
(1) விகுதி (2) இடைநிலை (3) சாரியை (4) பகுதி

27. இரு பெயரொட்டுப் பண்புத்தொகைக்கு உதாரணம்
(1) செந்தாமரை (2) பவளவாய்
(3) மன்னன் குலோத்துங்கன் (4) சேரசோழ பாண்டியர்

28. பாண்டியன் கடிவேல் ஏந்தி போர்க்களம் சென்றான். இங்கு கடி என்ற உரிச் சொல்லின் பொருள்
(1) வேகம் (2) கூர்மை (3) காவல் (4) புதுமை

29. பின்வருவனவற்றுள் செயப்படு பொருள் குன்றிய வாக்கியம்
(1) கடவுளை வணங்கிப் பணிகளை ஆரம்பித்தான். (2) அவன் பாதையில் வேகமாக நடந்தான்.
(3) கதைக்கு கரு சிறப்பைக் கொடுக்கும். (4) ஆழம் அறியாமல் காலை விடாதே.

30. ஒரு கூட்டத்தார் மற்றவர்க்குத் தெரியாமல் தங்களுக்குத் தெரியும் வகையில் வழங்கும் சொல்
(1) இடக்கரடக்கல் (2) இலக்கணமுடையது
(3) மரூஉ (4) குழூஉக் குறி

- **பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

31. அறிவியலினதும், தொழினுட்பத்தினதும் வளர்ச்சியினால் மனிதன் மகிழ்வுடன் வாழ்கின்றான். அதே நேரம் இயற்கையின் அழிவு, காற்று மாசடைதல், நீரில் நச்சுப்பொருள் கலந்திருத்தல் என்பவற்றால் மனித வாழ்க்கை நரகமாகி வருகின்றது. அறிவியல் மாற்றம் ஏற்படுத்தும் சூழல் பாதிப்புக்குக் காரண கர்த்தா மனிதன்தான்.
(1) அறிவியல் மனித வாழ்வை வளமாக்குகின்றது.
(2) அறிவியலால் இயற்கை செல்வங்கள் அழிவடைகின்றன.
(3) சூழல் மாசடைவதால் மனித வாழ்வு நரகமாகின்றது.
(4) அறிவியல் மாற்றம் ஏற்படுத்தும் சூழல் பாதிப்புக்குக் காரணம் மனிதனே.

32. கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்தார் வீரமாமுனிவர். அவர் தமிழின் இனிமையில் ஈடுபாடு கொண்டார். பல தமிழ் இலக்கியங்களைக் கற்றார். தேம்பாவணி எனும் சிறந்த காவியத்தைப் படைத்தார்.
(1) வீரமாமுனிவர் சமயத்தைப் பரப்ப தமிழகம் வந்தார்
(2) அவர் தமிழின் இனிமையை விரும்பினார்.
(3) தமிழ்ப் பற்றுமிக்க வீரமாமுனிவர் தேம்பாவணி எனும் காவியத்தை படைத்தார்.
(4) அவர் பல இலக்கியங்களைக் கற்றார்.

[பக். 4 ஐப் பார்க்க

- பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான **முடிக்கும் பகுதியைத்** தெரிவு செய்க.

33. பாலன் பாடிய பாடல்கள் அனைத்தும்
(1) இன்பமூட்டுவனவாய் இருந்தன (2) இன்பமூட்டுவதாய் இருந்தன
(3) இன்பமூட்டுவனவாய் இருந்தது (4) இன்பமூட்டுவதாய் இருந்தது

34. அழகை அனுபவிப்பதற்கு மதிநுட்பமும் நூற் பயிற்சியும்
(1) இன்றியமையாததல்ல (2) இன்றியமையாதவையன்று
(3) இன்றியமையாததன்று (4) இன்றியமையாதவையல்ல

35. பறவைகள் கூட்டங் கூட்டமாய் வானத்தில்
(1) பறந்தது (2) பறந்தன (3) பறக்கின்றது (4) பறக்காது

36. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகள் அற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) மாடு கிழமானாலும் பாலின் சுவை போகுமா?
(2) துல்லுகிற மாடு பொதி சுமக்கும்.
(3) காவோலை விளக் குருத்தோலை சிரிக்குமாம்.
(4) பழகப்பழகப் பாலும் புழிக்கும்.

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37. வேட்பாளர் ஒவ்வொருவரும் தமது தேர்தல் ........................ மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.
(1) பிரசுரத்தில் (2) விஞ்ஞாபனத்தில் (3) வாக்கு சேகரிப்பில் (4) பிரசாரத்தில்

38. வணிகத்துறையிலே சில பொருட்களின் விலையேற்றத்திற்கு காரணம் அப்பொருட்கள் மீதான ....................................... எனக் கூறின் மிகையாகாது.
(1) பாதீடு (2) பணப்பெருக்கம் (3) ஏகபோகம் (4) அங்காடி

39. நாம் ஈடுபடும் காரியம் கைகூடாதவிடத்து அதற்காக ...................................... புத்திசாலித்தனம் ஆகாது.
(1) அகமகிழ்தல் (2) ஆரவாரித்தல்
(3) அங்கலாய்த்தல் (4) கொட்டமடித்தல்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) - மனிதனின் மதிப்புயர்வு, மனித சமூகத்தை மாற்றியமைக்கும் உறுதி என்பனவே அவையாகும்.
(ஆ) - கைத்தொழில் வளர்ச்சி, நகரமயமாக்கல் என்பவற்றால் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் மாற்றங்கள் இடம்பெற்றன.
(இ) - தன் விதியை நிர்ணயிக்க வல்லவனாக மனிதன் இன்று நோக்கப்படுகின்றான்.
(ஈ) - அவற்றுள் முக்கியமாக மனங்கொள்ளப்பட வேண்டியவை இரண்டாகும்.
(உ) - இதனால் சுதந்திர, சகோதரத்துவ சமத்துவ சிந்தனைகள் முக்கியம் பெற்றன.

(1) ஆ, அ, இ, உ, ஈ (2) ஆ, ஈ, அ, இ, உ
(3) ஈ, அ, உ, ஆ, இ (4) ஆ, ஈ, அ, உ, இ

* *

[பக். 5 ஐப் பார்க்க

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
தாழ்மத வேழமொன் றாழ்கய மிறங்கி

(ii) செல் என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
“நாலைஞ்சு நாளைக்கு முந்தி இருபத்தைஞ்சாம் மலையிலே கொழுந்து எடுத்தாயே”

(iv) அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என்பவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(v) ஐந்து புலவர்கள் கவிதா நிகழ்விற் பங்குபற்றினர். இவ்வாக்கியத்தை வழுவின்றி எழுதுக.

(vi) பின்வரும் தன் வினைகளை பிற வினைகளாக மாற்றி எழுதுக.
(அ) அடங்கு (ஆ) திருந்து

(vii) கேலிச் சித்திரங்களின் பண்புகள் **இரண்டு** தருக.

(viii) ஒருவருக்கு ஒரு பொருள் பற்றி **விளக்கம்** எழுதும் போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய **இரண்டு** பிரதான பண்புகளைத் தெரிவு செய்து எழுதுக.

(தொடர்பாடல் சாதனங்களைக் கையாளும் திறன், குறித்த ஒருவரைச் சுட்டி எழுதும் திறன், சிறந்த கேள்விகளைக் கேட்கும் திறன், அறிவூட்டுதல் பாங்கில் எழுதும் திறன்)

(ix) “பாலா, அன்றிப் பழமா வேண்டும்? ” எனும் வாக்கியத்தில் பொருள் சிதையாதவாறு விலக்கிவிடக் கூடிய சொல் எது?

(x) வில்லுப்பாட்டின் அமைப்பு முறை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தி மீண்டும் எழுதுக.

(கதை வளர்ச்சி, கடவுள் வாழ்த்து, கதை ஆரம்பம், சபை வணக்கம், சபையோருக்கு நன்றி கூறி மங்களம் பாடுதல், கதை முடிவு)

(20 புள்ளிகள்)

[ பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் **பொருத்தமான தலையங்கம்** இடுக.

(அ) எரிபொருள் மனித வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இன்று எரிபொருளின் விலையேற்றம் நாட்டுமக்கள் யாவரினதும் அன்றாட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் முதல் சாதாரண உழைப்பாளிகள், அரச உத்தியோகத்தர்கள் வரை இந்த விலையேற்றம் ஒரு சவாலாகவே விளங்குகின்றது. இதனைவிளக்கும் வகையில் ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ஆ) இளைஞர் சமுதாயம் வெளிநாடு செல்வதை விடுத்து, எமது நாடு வளம் பெற உழைத்திட வேண்டும் எனக் கூறும் ஒருவருக்கும், அதனை மறுத்துரைக்கும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்**

(இ) மீள் உற்பத்தி செய்ய முடியாத வளங்களுள் நீர் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கு அப்பால் கடல் நீரை நன்னீராகப் பயன்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் இன்று வளர்ச்சி பெற்று வருகின்றது. இதனை எடுத்துரைக்கும் வகையில் நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு**

(ஈ) நாகரிக மோகம், போதைப் பொருள் பாவனை முதலியவற்றிற்கு அடிமைப்பட்டு தன் விருப்பப்படி வாழ்ந்தான் சுபாங்கன். இறுதியில் எல்லோராலும் வெறுக்கப்பட்டு ஆதரிப்பார் இன்றி கைவிடப்பட்டான். நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவனைப் பராமரிக்கும் பொறுப்பு அனுபவமிக்க தாதி ஸ்ரெலாவிற்கு கிடைக்கின்றது....... இப்பின்னணியினைக் கருத்திற் கொண்டு அன்பின் சக்தி அளப்பரியது என்பதை உணர்த்தும் வகையில் ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40-45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

வ.வே.சு ஐயர் என்று சுருக்கமாகவும் மதிப்போடும் அழைக்கப்பெறும் வரகநேரி வேங்கட சுப்பிரமணிய ஐயரே தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் என்று போற்றப்படுகின்றார். கலை, வீரம், விடுதலை என்ற மூன்றையே தம்முடைய உயிர் மூச்சாகக் கொண்டிருந்த ஐயரின் வாழ்க்கை கடைசி வரையிலும் அவற்றிற்கான தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தது. ஐயர் தம் வாழ்க்கையில் மேற்கொண்ட ஒரு காசி யாத்திரையின்போது செய்து கொண்ட இரு உறுதி மொழிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. அவர் மேற்கொண்ட உறுதிமொழிகளில் முதலாவது தமிழ் கலைவளர்ச்சி, இரண்டாவது குருகுலம் நிறுவுதல். இந்திய விடுதலைக்காக அவர் தம் வாழ்வையே ஒரு வேள்வியாக மாற்றிக் கொண்டிருந்தார் என்பது அனைவரும் வெளிப்படையாக அறிந்த ஒன்று. இந்திய விடுதலை அவர் இதயம் என்றால் மற்றைய இரண்டும் அவர் கண்களாகவே விளங்கின. குருகுலத்தில் இருந்து வெளியான “பாலபாரதி” தொடங்கியதற்கான காரணங்களை ஐயர் கூறும் போது இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். “இப்பத்திரிகை சேரமாதேவி குருகுலத்தின் வாயிலாகத் தோன்றுகின்றது. இத் தமிழ்க் குருகுலத்தின் நோக்கம் தனது இணையற்ற பேராற்றல் குலைந்து போயிருக்கும் தமிழுக்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தை தருவதாகும். அத்துடன் தமிழ் மக்களுக்குப் பூரணமான கல்வியுடன், அதாவது இலக்கியக் கல்வியோடு விசுவகர்மகலைகளும் கற்பிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இந்நோக்கத்திற்கேற்ப இப்பத்திரிகையில் சீனத்தில் இருந்து பெருந்தேசம் வரையுள்ள சகல நாடுகளிலும் பூத்த இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த முனைவோம்” என்று குறிப்பிட்டள்ளார்.

(10 புள்ளிகள்)

[ பக். 7 ஐப் பார்க்க

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

வறுமைப் புயலிற் சிக்கிவிடில்
வாழ்க்கை தன்னை வெறுப்பதுவோ
சிறுமைக் குணமே நீ கொண்டு
சிரமே தாழ்ந்து செல்வதுவோ

வறுமைப்பட்டே வாழ்ந்துலகில்
வளமும் புகழும் பெற்றுப்பின்
பெருமை பூண்டு வாழ்ந்திட்ட
பெரியோர் வாழ்க்கை பாடமடா

இன்பம்துன்பம் வாழ்வினிலே
இரவு பகலைப் போல வருமே
துன்பம் அந்தோ மாய்ந்தோடும்
துணிவைத் துணையாய்க் கொண்டாலே

(i) சிறுமைக் குணம் எனக் கவிஞர் கருதுவது எதனை?

(ii) நாம் எத்தகையோருடைய வாழ்க்கையைப் பாடமாகக் கொள்ள வேண்டும்?

(iii) எச்சந்தர்ப்பத்தில் துணிவைத் துணையாகக் கொள்ள வேண்டும்?

(iv) இக்கவிதையில் கையாளப்பட்ட அணிகளைக் குறிப்பிட்டு, விளக்குக.

(v) இக்கவிதை மூலம் கவிஞர் வாசகருக்குச் சொல்ல விரும்புவது என்ன?

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5.** "நல்ல நூல்கள், நல்ல நண்பர்களாகும்." இதனை வலியுறுத்தும் வகையிலும், மாணவர்களிடையே குறைவடைந்து வரும் வாசிப்பு பழக்கத்தை தூண்டும் வகையிலும் 100 சொற்களில் அமைந்த **துண்டுப்பிரசுரம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

நிறுவனம் ஒன்றின் உதவி முகாமையாளர் பதவிக்கு ஆள் தேவை என்ற பத்திரிகை விளம்பரத்தைக் கண்டவிடத்து அதற்குப் பொருத்தமாக உங்கள் சுயவிபரம், அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு 100 சொற்களில் அமைந்த விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

* * *

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2013

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

இரண்டு மணித்தியாலம்

**முக்கியம் :** அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** ஆம் வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) 'ஈன்றாளோடெண்ணக் கடவுளுமில்' - இத்தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

(ii) ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு - இக் குறட்பாவினைக் கொண்டு கூட்டி எழுதுக.

(iii) "சோழ சாம்ராஜ்யத்திற்கு இன்று இந்த இரண்டு புலவர்களின் பொறாமையோ அல்லது நட்போ ஒரு பெரிய விஷயமல்ல" - இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?

(iv) "கடற்புறம்" என்ற கவிதையினூடாகக் கவிஞர் கூற விழையும் பிரதான கருத்து யாது?

(v) 'விடியுமா?' இச்சிறுகதையின் மையக்கருத்து யாது?

(vi) நமச்சிவாயப் புலவரின் பாடலில் பெண்களின் கண்கள் எதற்கு உவமிக்கப்படுகிறது?

(vii) மண்ணெலாம் உய்ய மழைபோல........ என்ற பாடலின் பாடு பொருள் யாது? துணைக்கருத்து யாது?

(viii) பெண்ணுக்கு கல்வி அவசியம் என்பதற்கு கம்பர் கூறும் காரணங்கள் எவை?

(ix) நீதிப்பாடல்கள் பகுதியில் இடம்பெற்றுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் **இரண்டு** தருக.

(x) 'காணி நிலம் வேண்டும்' என்ற பாரதியார் பாடலின் சிறப்பு 'பாரதியார் கவிநயம்' என்ற கட்டுரையில் எவ்வாறு காட்டப்படுகிறது?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் **தடித்த எழுத்துக்களில்** உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) மங்கையர் கண் புனல்பொழிய மழை பொழியும் காலம்
மாரவேள் சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகை நகைக்கும் காலம்
**செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன் பெய் ஏகத்**
**தியாகியெனும் நந்தி**யருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங்காலம்

(ஆ) காப்படங்கென றன்னை கடிமனையிற் செறித்து
யாப்படங்க ஓடி அடைத்த பின் - **மாக்கடுங்கோன்**
**நன்னலம் காணக் கதவம் துளை தொட்டார்க்**
**கென்னைகொல் கைம்மாறினி...........**

பக் 2 ஐப் பார்க்க

(இ) செல்வம் நிறைந்த பேதையர் நிலத்திற்குச் சுமையாகவும் உலகத்திற்கு உற்ற வசையாகவும் அமைந்திருத்தலால் அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வரை உலகம் போற்றும், அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும். **அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும் மறுமையில் இன்பமும் எய்துவான்.**

(ஈ) வான்மீகி தெய்வ மாக்கவி. அவர் இயற்றிய காவியம் திருபாற்கடல். **பாற்கடல் முழுவதையும் பருகுவதற்கு ஒரு பூனையால் முடியமா?** தாங்களோ அந்தப் பெருநூலைத் தமிழ்ப்படுத்தவும் வேண்டும் என்கின்றீர்கள். என்னால் முடியக்கூடிய காரியமா அது? கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றலாம்.

(20 புள்ளிகள்)

3. 'பி. எஸ் ராமையா இயற்கை மீது அதிக ஈடுபாடு கொண்டவர்' நக்ஷத்திரக் குழந்தைகள் என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக.

**அல்லது**

தந்தையின் ஆளுமையைச் சித்திரிப்பதற்கு குழந்தை விமலனின் பாத்திரப்படைப்பு எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது?

(15 புள்ளிகள்)

**4.** "கவிச்சக்கரவர்த்தி" என்ற பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

(அ) துமி என்ற சொல்லிற்குப் பொருள் கண்டபின் ஒட்டக்கூத்தரின் மனநிலை எடுத்துக் காட்டப்படும் விதம்.
(ஆ) கம்பரின் புலமைத்துவத்தை சோழன் பாராட்டும் சந்தர்ப்பங்கள்.
(இ) சோழ நாட்டு மக்களின் தமிழ்ப்பற்று.

(15 புள்ளிகள்)

**அல்லது**

"கல்வியே அழியாச் செல்வம்" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.
(அ) திருமூலநாயனாரால் குறிப்பிடப்படும் கல்வியின் பயன்கள் எவை?
(ஆ) கல்வியால் கிடைக்கும் உண்மையழகு நாலடியாரில் எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது?
(இ) அழியாச் செல்வத்தைப் பெறவேண்டும் எனும் அவா மனிதரிடம் இயற்கையாகவே உள்ளது என்பதற்கு கட்டுரையாசிரியர் தரும் உதாரணங்கள் எவை?

(15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆம் வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து விடை எழுதுக.

5. மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறுகதையில்
(அ) சூசிகை கையாளப்பட்டதன் நோக்கம் யாது?
(ஆ) வ.வே.சு ஐயரின் சிறுகதை எழுதும் ஆற்றல் வெளிப்படும் விதம்.
(இ) இக்கதை எழுதப்பட்ட காலப்பின்னணி
என்பவற்றை தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

6. (அ) 'குத்துக்கட்டை மேலேறி.....' எனும் பாடலில் பெண்ணின் மனநிலை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
(ஆ) மீன்பிடிகாரர் பாடலில் மீனவர் சமூகம் வாழ்க்கைமீதும் தொழில்மீதும் கொண்டிருந்த பற்றுறுதி எவ்வாறு வெளிப்படுகின்றது?

(10 புள்ளிகள்)

7. (அ) 'நல்லமரமும் நச்சுமரமும்' என்ற கட்டுரையை எழுதிய ஆசிரியரின் நோக்கம் யாது?
(ஆ) இந் நோக்கத்தை அடைவதற்கு ஆசிரியர் கையாண்டுள்ள உத்திகளை வளக்குக.

(10 புள்ளிகள்)

* * *